2

# பிதாவோடு ஐக்கியமாயிருத்தல்

*1 யோவான் நிருபத்தின் ஐந்து அதிகாரங்களில்,கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய உபதேசங்களில் சில வழங்கப்படுவதை நாம் காண்கிறோம். ஒரு இசை வெளியீட்டுக்கான பாடல் தொகுப்பில், ஒரு குறிப்பிட்ட ராகத்தை திரும்ப திரும்ப இசைத்து பார்ப்பது போல, யோவான் இந்த உபதேசங்களை திரும்ப திரும்ப குறிப்பிடுகிறார்.*

*யோவான் எந்த கிறிஸ்தவர்களுக்கு இந்த இசைத் தொகுப்பை எழுதினாரோ, அவர்களை அவர் ஊன்றி கட்டியெழுப்ப விரும்பினார். அவர்கள் ஏற்றுக் கொண்ட உபதேசங்களின் மெய்த்தன்மையை வலியுறுத்தினார், மற்றும் அவர் அவர்களை கள்ளப் போதகர்களுக்கு எதிராக எச்சரித்தார். மேலும் யோவான் அவர்களுடைய இரட்சிப்பை உறுதி செய்ததோடு, அவர்களை நீதியாய் வாழும்படி வேண்டிக்கொண்டார், இதை அவர் செய்கிற வேளையில், கிறிஸ்தவத்தின் மிகப்பெரிய சத்தியங்களை வலியுறுத்தினார்.*

*நாம் இந்த நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரத்தையும் கூர்ந்து நோக்கும் போது, இந்த பெரிதான சத்தியங்களில் சிலவற்றை கண்டுபிடிப்போம். ஒவ்வொரு பாடத்திற்கும், அந்தஅதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மைய கருத்தை எடுத்துக்கொள்வோம். அந்த அதிகாரத்தில் மட்டுமல்ல, அந்த நிருபம் முழுவதுமாக யோவான் அந்த மைய கருத்தை பற்றி என்ன கூறியுள்ளார் என்பதை நாம் ஆராய்வோம்.*

*அதிகாரம் 1 இல், "ஒரு கிறிஸ்தவருக்கு … பிதாவோடு உள்ள ஐக்கியத்தை"[1] குறித்து வாசிக்கிறோம். யோவான் இவ்வாறு எழுதினார்,*

> *நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி,நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும்அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும்இருக்கிறது (வசனம் 3).*

*(1) அப்படிப்பட்ட ஐக்கியத்திற்கான அவசியம், (2) அந்த ஐக்கியத்தை அடைதல் மற்றும் அதை பராமரித்தல், மற்றும் (3) தேவனோடு ஐக்கியமாயிருப்பதினால் வரும் பலன்கள் ஆகிய இவைகளை குறித்து படிக்க விரும்புகிறோம்.*

## தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கான அவசியம்

*"நாம் ஏன் பிதாவோடு ஐக்கியமாயிருப்பதற்கு விரும்பவேண்டும்?" என்ற கேள்வியுடன் தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கான அவசியத்தை நாம் சிந்திப்போம். அதற்கான பதில் நாம் ஆராதிக்கிற தேவனுடைய குணாதிசயத்திலிருக்கிறது.*

### பிற தெய்வங்களோடு மனிதகுடும்பத்திற்குள்ள உறவு

மக்கள், அவர்களுடைய சமூக குழுக்களில் எப்போதுமே ஏதாவது ஒரு தெய்வம் அல்லது தெய்வங்களை வழிபட்டு வந்துள்ளனர். அவர்கள் தங்கள் தெய்வம் அல்லது தெய்வங்களை குறித்து என்ன கருத்து உடையவர்களாயிருந்தார்களோ, அதின் அடிப்படையிலேயே, அவைகளோடு அவர்களுக்கு தொடர்பு மற்றும் உறவு இருந்தது.

*இயற்கையின் கடவுள்கள்.* சிலர் இயற்கையின் மூலப்பொருட்களை தெய்வங்களுக்கு சமமாக்குகிறார்கள். சூரியன், மழை மற்றும் ஆறுகள் முதலியவை அவர்கள் தெய்வங்களாயிருக்கின்றன. அவைகளால் நன்மை பெரும்படி அவைகளுக்கு பலி செலுத்த தாங்கள் கடமைப்பட்டுள்ளதாக அவர்கள் உணருகின்றனர்.

*ஆவிகளின் கடவுள்கள்.* பூமிக்குரிய பொருட்களில் ஆவிகளின் கடவுள்கள் இரண்டாக கலந்திருப்பதாக சிலர் நம்புகிறார்கள். ஒவ்வொரு மரம் அல்லது புதர் ஒரு ஆவியைக் கொண்டிருப்பதாகவும், ஆகவே அவைகளுக்கு கோபமூட்டாதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென கருதப்படுவதுண்டு. இந்த ஆவிகள் நன்மை செய்வதற்கு பதிலாக கொடூரமானவைகளாக இருப்பதாக கருதப்படுவதால், அவைகளை நம்புகிறவர்கள் அவைகளை அமைதிபடுத்துவதை குறித்து தொடர்ந்து அக்கரையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

*கிரேக்க மற்றும் ரோமானிய கடவுள்கள்.* பண்டைய காலத்து கிரேக்க மற்றும் ரோமானியர்கள் ஆகாய மண்டலத்து கடவுள்கள் இருந்ததாகவும், அவைகள் அங்கிருந்து பூமியை பார்த்து, அவ்வப்போது மனித நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் நம்பினார்கள். அவைகள் சலன புத்தியுள்ளவைகளாயிருந்தன; சில நேரங்களில் அவைகள் உதவியாயிருந்ததாக சொல்லப்பட்டதுண்டு, மற்றும் சில நேரங்களில் அவைகள் மனிதனுக்கு துன்பம் இழைப்பவைகளாக கருதப்பட்டதுண்டு, மனிதர் அவைகளின் தயவை பெறவும் அல்லது அவைகளின் கோபத்தை தவிர்க்கவும், அவைகளோடு பேரம் பேசவும் அல்லது கூடுமானால் அவைகளை ஏமாற்றவும் முயன்றதுண்டு.

*இந்து சமயம்.* இந்துக்கள் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான கடவுள்கள் இருப்பதாகவும், அவைகள் எல்லாம் முடிவில் ஒரு ஏக கடவுளுக்குள் உள்ளடங்குவதாகவும் நம்புகின்றனர். அவர்களுடைய நோக்கம் எல்லாவற்றையும் உண்டாக்குகிற அந்த கடவுளுக்குள் இணைந்து அதன் ஒரு பகுதியாக மாறுவதின் மூலம் தங்கள் அடையாளத்தை இழந்து விடுவதாகும்.

### கர்த்தராகிய தேவனோடு நாம் கொண்டுள்ள உறவு: அவருடைய ஐக்கியத்தை தேடுதல்

கர்த்தராகிய தேவனோடு, வேதாகமத்தின் தேவனோடு நாம் கொண்டுள்ள உறவு, அவர் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்பதின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவர் சர்வவல்லமையுள்ளவர், அவர் எல்லாவற்றையும் அறிந்தவர், அவர் எங்கும் வியாபித்திருக்கிறவர், முற்றிலும் பரிசுத்தமானவர் மற்றும் முற்றிலும் நீதியுள்ளவர், மேலும் அவர் தனிப்பட்டவர், அன்பு நிறைந்தவர் மற்றும் இரக்கம் நிறைந்தவர். தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் போது, அவர்கள் பதிலுரைப்பு அவரை அமைதிபடுத்துவதாகவோ அல்லது அவரது கோபத்தை தவிர்ப்பதாகவோ

இருக்காது, இருக்க வேண்டிய அவசியமில்லை. மனிதனுடைய சரியான பதிலுரைப்பு என்பது தேவனோடு பேரம் பேசுவதாக இருக்காது, மாறாக அவரிடம் கிட்டிச் சேருவதாக இருக்கும்.

விக்கிரக வழிபாட்டுக்காரரான அத்தேனே மக்களிடம் பவுல் பேசிய போது, இந்த தேவன் தான் எல்லாவற்றையும் மற்றும் மனிதனையும் தம்மை தேடும்படி உண்டாக்கினவர் என்று விவரித்தார். “கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் ...” (நடபடிகள் 17:27, 28அ) கர்த்தராகிய தேவனை அறிந்தவர்கள் அவரை தேடக்கூடியவர்களாயிருக்கிறார்கள்!

கர்த்தராகிய தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்பதை அறிந்திருப்பது அவரோடிருப்பதற்கான ஒரு விருப்பத்தை, அவருடைய சமூகத்திலிருப்பதற்கான ஒரு பேராவலை - அவருக்கான ஒரு பசிதாகத்தை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட பேராவல், சங்கீதக்காரன் எழுதினதின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது,

> மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது ... (சங்கீதம் 42:1, 2அ).

நம்முடைய பாடல்கள் சிலவற்றில், தேவனோடு நெருங்கி இருப்பதற்கான விருப்பத்தை நாம் தெரிவிக்கிறோம். நாம் இப்படி பாடுகிறோம்,

> உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
> சிலுவை சுமந்து நடப்பினும்
> என் ஆவல் என்றுமே
> உம்மண்டை தேவனே, நான் சேர்வதே![2]

**ஒரு உதாரணம்: தேவனுக்கான நம்முடைய தேவை மற்றும் விருப்பம்**

ஒரு உதாரணத்தை பயன்படுத்துவதன் மூலம், தேவனுக்கான நம்முடைய தேவை-மற்றும் நாம் ஏன் அவரோடு ஐக்கியமாயிருக்க விரும்புகிறோம் என்பதை நாம் சிறப்பாக பாராட்டமுடியும். நீங்கள் உங்கள் கிராமத்திலுள்ள ஒரு நோயுற்ற மற்றும் ஆதரவற்ற ஒரு குழந்தை என கற்பனை செய்து கொள்ளுங்கள், உங்களுக்காக கரிசனைப்பட ஒருவரும் இல்லை; மற்றவர்கள் தூக்கி எறியும் உணவு துணிக்கைகளை சாப்பிட்டுக் கொண்டு, எங்கு அடைக்கலம் கிடைக்கிறதோ அங்கு தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர் மற்றும் எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டவர்.

அங்குள்ள மக்கள் குழு தலைவர் எல்லாரிலும் மிக பெரியவர், பலசாலி, அழகானவர், மாபெரும் செல்வந்தர், அறிவுள்ளவர் மற்றும் நல்லவராக இருக்கிறார் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அவருடைய சிறப்புகளை எல்லாம் நீங்கள் அறிந்திருந்தாலும், நீங்கள் சமூகத்தில் ஒன்றுமில்லாதவராயிருந்ததால் அது உங்களுக்கு எந்த நன்மையும் செய்வதில்லை. அப்படிப்பட்ட பெரிய மனிதரை,

மற்றும் நல்லவரை நீங்கள் அணுகுவதற்கு உங்களுக்கு வழியில்லை.

பின்பு, ஒரு நாளில் அந்த தலைவர் உங்கள் கிராமத்தின் வழியாக நடந்து செல்கிறார். அவர் உங்களை கவனித்து, தம்மண்டைவரும்படி உங்களை அழைக்கிறார்.நீங்கள் நடுக்கத்தோடு அவரை அணுகுகிறீர்கள். அவர் உங்கள் சூழ்நிலை குறித்து கேட்கிறார். நீங்கள் ஒரு அனாதை, நோயுற்றவர், எதற்கும் பிரயோஜனம் இல்லாதவர் மற்றும் சாவதற்கு விட்டுவிடப்பட்டவர் என்பதை மற்றவர்கள் விளக்குகிறார்கள். இருப்பினும், அவர் உங்களை தூக்கி எடுத்து, தம் கரங்களில் அணைத்துக் கொள்கிறார், தன் வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார், உங்கள் வியாதிக்கு சிகிச்சை அளிக்கிறார், நீங்கள் சுகம் பெற உதவி செய்கிறார், உங்களை தன் சொந்த பிள்ளையாக தத்து எடுத்துக் கொள்கிறார் மற்றும் தன் செல்வம் எல்லாவற்றையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறார். நீங்கள் எப்படி உணருவீர்கள்? ஒன்றும் இல்லாத ஒரு நிலையில் இருந்து, எல்லாவற்றையும் உடையவராயிருக்கிற மற்றும் எல்லாமுமாயிருக்கிற ஒருவரோடு இணைக்கப்படுவது அவரால் அரவணைக்கப்படுவது, அவரால் நேசிக்கப்படுவது அவரால் சுகமாக்கப்படுவது மற்றும் அவரால் பராமரிக்கப்படுவது என்பது எப்படிப்பட்டதாயிருக்கும்? நீங்கள் அந்த அனாதை குழந்தையாயிருந்தால், அப்படிப்பட்ட ஒருவரோடு இணைக்கப்படுவதை வாஞ்சிக்கமாட்டீர்களா?

இந்த கதை நம்முடைய சூழ்நிலையை விளக்கக்கூடியதாயுள்ளது. நாமும் கூட அந்த அனாதை குழந்தையைப் போல, நம்பிக்கையற்ற அல்லது உதவியற்ற பாவியாக, பாவம் என்னும் வியாதியால் மரணத்திற்கு ஏதுவானவர்களாக, நமக்காக கரிசனைப்பட ஒருவரும் இல்லாதவர்களாக, எதற்கும் தகுதி இல்லாதவர்களாக, எந்த நன்மையும் இல்லாதவர்களாக இருக்கிறோம். இருப்பினும், தேவனால் அன்புகூரப்பட்டும், ஆறுதல்படுத்தப்பட்டும் மற்றும் தேவனுடைய குடும்பத்தின் ஒரு பகுதியாக மாறும், அவரால் நேசிக்கப்பட்டும் மற்றும் எல்லாவற்றிக்கும் சொந்தக்காரராயிருக்கிற ஒருவருடைய நிறைவான ஆசீர்வாதங்களை நாம் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை உடையவர்களாக இருக்கிறோம்! இன்னும் மேலாக, நம்மை முழுமையாக அறிந்திருக்கிற மற்றும் அதே சமயத்தில் நம்மை நேசிக்கிற, நம்மோடிருக்க வாக்குத்தத்தம் செய்கிற மற்றும் நமக்காக எப்போதும் கரிசனைப்படுகிற ஒருவரோடு நாம் ஐக்கியம் கொள்ளமுடியும்! அப்படியானால், இந்த உலகத்தில் வேறு எதை பார்க்கிலும், நாம் ஏன் தேவனோடு நெருங்கி இருப்பதை அதிகமாக விரும்பாமலிருப்போம்? எந்த ஒருவர் ஏன் பிதாவோடு ஐக்கியமாயிருப்பதை அசட்டைசெய்யக்கூடியவராக இருப்பார்? நம்முடைய தேவன் மகாபெரியவராக இருக்கிறார் மற்றும் நம்மை நேசிக்கிறவராக இருக்கிறார். நாம் அவரிடமிருந்து விலகியிருக்கமாட்டோம், அல்லது அவரிடமிருந்து ஒளிந்து கொள்ள மாட்டோம்; மாறாக, இப்போதும் மற்றும் என்றென்றைக்கும் அவரோடிருப்பதை நாடுவோம்!

### 1 யோவான் நிருபத்தில் பிதாவோடு ஐக்கியமாயிருத்தல்

நாம் தனிப்பட்ட ஐக்கியம் வைத்துக் கொள்ளக்கூடிய ஒருவரை தேடிக் கண்டுபிடிப்பது சாத்தியமானதா? யோவான் அது சாத்தியமானது தான் என்பதை பெலத்தோடு உறுதிசெய்கிறார். அவர் தனது முதல் நிருபத்தை “நாம் பிதாவோடு ஐக்கியமாயிருக்க முடியும் ...” (1:3) என்று துவங்கினது மட்டுமல்லாமல், அந்த ஐக்கியத்தை தன் நிருபங்கள் முழுவதுமாக வலியுறுத்திகூறியுள்ளார். அநேக

*வழிகளில் நாம் தேவனோடு நெருங்கிய உறவு கொண்டிருக்க முடியும் என்பதை பற்றியும் பேசுகிறார்.*

*சில நேரங்களில் நாம் பிதாவோடு கொண்டிருக்கும் உறவு என்பது, அவரை* ***அறிந்திருத்தல்*** *என்று விவரிக்கப்படுகிறது. உதாரணமாக, "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்கிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" (1 யோவான் 2:3; காண்க வசனங்கள் 4, 5).[3] என்று யோவான் எழுதினார். சில நேரங்களில் அது* ***நாம் தேவனுக்குள் இருத்தல்*** *என்று விளக்கப்படுத்தப்படுகிறது (1 யோவான் 2:5; 5:20) அல்லது* ***அவர் நமக்குள் இருத்தல்*** *என்றும் விவரிக்கப்படுகிறது (1 யோவான் 4:4). சில சமயங்களில், கிறிஸ்தவர்கள்* ***"தேவனால் உண்டானவர்கள்"*** *(1 யோவான் 4:6), "தேவனால் உண்டாயிருக்கிறோம்" (1 யோவான் 5:19), அல்லது* ***"தேவனால் பிறந்தவன்"*** *(1 யோவான் 4:7; 1 யோவான் 5:1, 4, 18) என்றும் விவரிக்கப்பட்டுள்ளார்கள்.* ***"நாம் தேவனுடைய பிள்ளைகள்"*** *என அழைக்கப்படுகிறோம் (1 யோவான் 3:1, 2, 10). "ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" என யோவான் எழுதினார் (1 யோவான் 4:17ஆ).*

*இருப்பினும் தேவனோடு நமக்குள்ள ஐக்கியத்தை விவரிப்பதற்காக பெரும்பாலான நேரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பதம், "நிலைத்திருத்தல்" என்பதாகும். நாம் தேவனில் நிலைத்திருப்பதாலும் மற்றும் அவர் நம்மில் நிலைத்திருப்பதாலும், நாம் பிதாவோடு ஐக்கியம் கொண்டிருக்க முடியும் என்ற கருத்தை யோவான் நிருபம் முழுவதும் வலியுறுத்தி கூறியுள்ளார். உதாரணமாக, நாம்,*

> *ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள் என வாசிக்கிறோம் (1 யோவான் 2:24).[4]*

*பிதாவோடு ஐக்கியமாயிருப்பது -நாம் தேவனில் நிலைத்திருத்தல் மற்றும் தேவனானவர் நம்மில் நிலைத்திருத்தல் என்பது சாத்தியமான ஒன்றுதான் என்பதை இந்த வசனங்களின் மூலம் அறிந்து கொள்கிறோம். நமது வாழ்க்கையில் பல காரியங்கள் நிச்சயமற்றவைகளாக இருக்கின்றன, ஆனால் தேவனோடு நாம் ஐக்கியமுள்ளவர்களாயிருக்க முடியும் என்பதை குறித்து நாம் நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம்!*

*நாம் இந்த உண்மையை இன்னும் கூடுதலாக வலியுறுத்திகூற வேண்டிய அவசியம் இருக்கிறது. தேவனை குறித்து நாம் என்ன சிந்திக்கிறோம்? தேவன் ராஜாவாயிருக்கிறார், ஆகவே நாம் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும்; ஆனால் தேவனோடு நமக்குள்ள உறவில் இன்னும் மோலானவைகள் உள்ளன. தேவனோடு நமக்குள்ள உறவை ஒரு விதமான பொருளாதார பரிவுணர்வாக கருதலாம்; மனுஷர் வழக்கின்படியாக, தேவன் நமக்கு - இரட்சிப்பு மற்றும் நித்திய வாழ்வை கொடுக்கிறார் - அதற்கு திருப்புதலாக, நாம் அவருக்கு நம்முடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலை கொடுக்கிறோம்; எப்படியிருப்பினும், தேவனோடு நமக்குள்ள உறவில் இன்னமும் மேலானவைகள் உள்ளன.*

தேவனோடு ஐக்கியம் - ஒரு நெருங்கிய ஐக்கியம், ஒரு தனிப்பட்ட உறவு, ஒரு நெருங்கிய உறவு, ஒரு தொடரும் உறவு மற்றும் பயனளிக்கும் ஒரு நட்புறவு ஆகியவற்றை நாம் பிதாவோடு கொண்டிருப்பது சாத்தியமானது என்பதை நாம் காணத்துவங்குகிறவரையில் - தேவனோடு நமக்குள்ள உறவு அது இருக்க வேண்டிய அளவுக்கு நிறைவுள்ளதாக இருக்காது.

## ஐக்கியம் கொண்டிருப்பதற்கான வழிமுறை

*நாம் பிதாவின் ஐக்கியத்தை எப்படி அடைந்து, அதன் பின்னர் அதை பராமரிக்க முடியும்?*

**ஐக்கியத்தை அடைதல்**

*நாம் பிதாவோடு ஆரம்பநிலையில் எப்படி ஐக்கியத்தில் வருகிறோம்? அதிகாரம் 1 இன் சில வசனங்களில் அதற்கான பதில் உணர்த்தப்பட்டுள்ளது.*[5]

*ஆங்கிலத்தில் முதல் வசனத்தில் வரும் "என்ன"* (what) *(வசனம் 1) என்ற முதல் வார்த்தைக்கு கிரேக்க மொழியில் ho, என்ற பலவின்பால் தொடர்பு பிரதி பெயர் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் "இருந்ததும்," "கேட்டதும்" மற்றும் "கண்டதும்" - "என்ன" இருந்ததோ, "என்னத்தை" கேட்டோமோ, "என்னத்தை" கண்டோமோ என்ற பொருளில் வந்துள்ளது. யோவான் தொடர்ந்து, "நாங்கள் கேட்டதும்," "கண்டதும்," "நோக்கிபார்த்ததும்," மற்றும் "தொட்டதும்" என்று கூறும்போது அவர் இயேசுவை குறித்து பேசினார் என்று நம்புவது சரியானதாக இருக்கிறது. அவர் இயேசுவை குறிப்பிடும் போது, ஒரு "ஆண்பால் பெயர்சொல்லை" பயன்படுத்துவதற்கு பதிலாக, ஏன் ஒரு பலவின்பால் பிரதி பெயர் சொல்லை பயன்படுத்துவார்? யோவான் இயேசுகிறிஸ்துவின் நபர் தன்மையை அல்ல,மாறாக அவரைப் பற்றிய செய்தியை வலியுறுத்தி கூறியுள்ளார் என சில விளக்கவுரையாளர்கள் நம்புகிறார்கள்.*[6] *யோவான் இயேசுகிறிஸ்துவை ஒரு நபராக மட்டுமல்ல, மேலும் இயேசுவின் குணாதிசயங்களை "வார்த்தை"*[7] *என்றும் குறிப்பிட்டார் என்று வேறு விளக்கவுரையாளர்கள் விளக்கப்படுத்தியுள்ளனர். இருந்த போதிலும், "முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு … இந்த பாடமானது தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பற்றியது என்பதை புரிந்து கொள்வதில் சிரமம் இருந்திருக்காது" (வசனம் 3).*[8]

*வசனங்கள் 1:1-4இல், இயேசுகிறிஸ்து உண்மையிலேயே மாம்சத்தில் வந்தார் என்ற நிருபத்தின் மையக் கருத்துக்களில் ஒன்றை கூறுகிறார். யோவானுடைய வாசகர்களை குழப்பிக் கொண்டிருந்த கள்ளப் போதகர்களால் இந்த சத்தியம் மறுக்கப்பட்டது (1 யோவான் 2:18-23; 4:1-3). யோவான், தானும் பிற அப்போஸ்தலரும் இயேசு பேசினதை தங்கள் காதுகளால் கேட்டதாகவும், அவரை தங்கள் கண்களால் கண்டதாகவும், அவரை தங்கள் கைகளால் தொட்டதாகவும் கூறி இயேசுவின் மனிதத்தன்மையின் யதார்த்தத்தை வலியுறுத்தினார். இயேசுகிறிஸ்து ஒரு உண்மையான மனிதராயிருந்தார், உண்மையான மனித சரீரத்தில் இருந்தார்!*

*இந்த இயேசுகிறிஸ்துவின் மூலம் நாம் இரட்சிக்கப்பட்டுள்ளதால், பிதாவோடு ஐக்கியம் உடையவர்களாக இருக்கிறோம் "நாம் அவராலே பிழைக்கும்படிக்கு," தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகில் அனுப்பினார் என்று யோவான் கூறினார் (1 யோவான் 4:9), மேலும் யோவான்*

தேவன், "குமாரனை உலகரட்சகராக அனுப்பினார்" என்று எழுதினார் (1 யோவான் 4:14).

இயேசு கொண்டு வந்த இரட்சிப்பை நாம் எவ்விதமாக பெற்றுக்கொள்கிறோம்? கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதின் மூலமாக பெற்றுக் கொள்கிறோம். "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்" என்று வாசிக்கிறோம் (1 யோவான் 5:1அ; காண்க 3:23); "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார்; அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" (1 யோவான் 4:15).

கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது மட்டும் நம்மை தேவனுடைய ஐக்கியத்திற்குள் கொண்டு வராது. "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவை பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" என கலாத்தியர் 3:26 கூறுகிறது. மேலும் அதற்கு அடுத்த வசனமே, "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என கூறுகிறது (கலாத்தியர் 3:27). விசுவாசித்தல் மற்றும் கிறிஸ்துவிலுள்ள நம்முடைய விசுவாசத்தை அறிக்கையிடுவதை தொடர்ந்து, நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும் போது, தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம். அந்த சந்தர்ப்பத்தில் நாம் தேவனோடும், கிறிஸ்துவோடும் மற்றும் தேவனுடைய பிள்ளைகளோடும், ஐக்கியத்தை பெற்றுக் கொள்கிறோம்.

**ஐக்கியத்தை பராமரித்தல்**

தேவனுடைய கிருபையினால், நாம் பிதாவோடும் அவருடைய குமாரனோடும் ஐக்கியத்தை அடைந்த பிறகு, அது எப்படி பராமரிக்கப்படமுடியும்? கிறிஸ்தவர்கள் அந்த ஐக்கியத்தில் எப்படி தொடர்ந்து இருக்க முடியும்? 1ஆம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதி அந்த பாடத்தை பற்றி பேசுகிறது.

இந்த வசனங்களின் வாயிலாக, ஒருவரோடொருவர் அன்பாயிருத்தல்,[9] தேவனுக்கு கீழ்ப்படிதல்,[10] மற்றும் சத்தியத்தில் நிலைத்திருத்தல், ஆகிய யாவும் தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கு தேவையானவைகளாயிருக்கின்றன என்பதை கவனிக்கிறோம்[11]. எப்படியிருந்தாலும், 1 யோவான் 1:5-10 இல் நாம் தேவனோடு ஐக்கியமாயிருக்க குறிப்பாக சொல்லப்பட்டுள்ள நிபந்தனை, "அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே ... நடக்க வேண்டும் ..." என்பதாயுள்ளது (1 யோவான் 1:7). ஒளியில் நடத்தல் என்றால் அதின் அர்த்தம் என்ன? அதின் பொருள், நீதியாக வாழ்வதற்கு நம்மால் எவ்வளவு சிறப்பாக செயல்பட முடியுமோ அவ்வளவு சிறப்பாக செயல்படுவது, தேவனை பின்பற்றுவது, மற்றும் "பாதைக்கு வெளிச்சமாயிருக்கிற" அவருடைய வசனத்திற்கு கீழ்ப்படிவதன் மூலம் தேவனுடைய சித்தத்தை செய்வது (சங்கீதம் 119:105).[12]

ஒரு சிலர் பாவத்தில் ("இருளில் நடத்தல்") வாழ்ந்து கொண்டே, தேவனோடு ஐக்கியமாக இருக்க முடியும் என நம்பினார்கள் (1 யோவான்

1:6). அப்படிப்பட்ட ஒரு காரியம் சாத்தியமானதல்ல. ஏனெனில், "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை ..." என யோவான் கூறுகிறார். ஒரு மனிதன் துணிகரமாக பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, அவன் சகல பரிசுத்தமுமுள்ள தேவனோடு - நடந்து கொண்டு, வாழ்ந்து கொண்டு மற்றும் அவரோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டிருக்க முடியுமா? "முடியாது!" என யோவானுடைய நிருபம் மிக தெளிவாகக் கூறுகிறது.[13]

சிலருக்கு அந்த பாடம் தேவையாயிருக்கிறது. அவர்கள் தேவனுடைய சட்டங்களை மதிப்பதில்லை மற்றும் சாத்தானுடைய வேண்டுகோள்களை பின்பற்றி, பாவம் மற்றும் வீணான வாழ்க்கையை வாழ்கிறார்கள், இருப்பினும் அவர்கள் பிரச்சனையில் அகப்படும் போது அல்லது அவர்களுக்கு உதவி தேவைப்படும் போது தேவனுடைய உதவியை நாடி அவரிடம் கூக்குறலிடுகிறார்கள்! அவர்கள் இருளில் வாழ தீர்மானித்திருக்கும் போது, ஒளியாயிருக்கிற,[14] ஒளியின் தேவன் தங்களுடைய ஜெபங்களுக்கு பதில் தரவேண்டுமென்று அவர்கள் எப்படி எதிர்பார்க்கலாம்?

அதே நேரத்தில், "ஒளியில் நடத்தல்" என்பது கிறிஸ்தவர்களாகிய நாம் பாவம் அற்றவர்களாக வாழ்கிறோம் என்பது அதின் பொருள் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எல்லாரும் கிறிஸ்தவராவதற்கு முன்பும் அதற்கு பின்பும் பாவம் செய்கிறோம். நமக்கு "பாவம் இல்லை" அல்லது "பாவம் செய்யவில்லை" என்று சொல்வோமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறோம் என யோவான் கூறுகிறார். பின்பு, "சத்தியம் நமக்குள் இராது," "நாம் அவரை பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்," மற்றும் "அவருடைய வார்த்தை நமக்குள் இராது" (1 யோவான் 1:8, 10).[15] இருந்தாலும், நாம் பாவம் செய்தால், நம் பாவங்களை அறிக்கை செய்வதின் மூலம் தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியத்தை நாம் பழுது நீக்கி கொள்கிறோம்; தேவன் அப்போது நம் பாவங்களை உண்மையிலேயே மன்னிக்கிறார் (1 யோவான் 1:9).[16]

நாம் பிதாவை விசுவாசிப்பதால், கிறிஸ்து மூலம் அவரோடு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம் மற்றும் ஒளியில் நடந்தால் கிறிஸ்துவுடன் ஐக்கியத்தை பராமரிக்கிறோம். தேவன் நடத்துகிறபடி வாழ நாம் சிறப்பாய் செயல்படுகிறோம் மற்றும் நாம் தவறும் போது, நமது பாவங்களை அறிக்கை செய்கிறோம். நமது ஐக்கியம் நமது சிறப்புகளால் பராமரிக்கப்படுவதில்லை, மாறாக "சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கிற" இரத்தத்தை சிந்தின இயேசு கிறிஸ்துவால் அந்த ஐக்கியத்தை பராமரிக்கிறோம் (1 யோவான் 1:7).[17]

## ஐக்கியமாயிருப்பதின் பலன்கள்

தேவனோடு ஐக்கியமாயிருப்பதினால் கிடைக்கும் பலன்கள் என்ன? நாம் அந்த ஐக்கியத்தை பெற்றுக்கொண்டு மற்றும் அதை பராமரிப்பதினால் என்ன பெறுகிறோம்? நாம் தேவனோடு ஐக்கியம் உடையவர்களாயிருந்து, ஒளியில் நடப்பதால், நமது பாவங்களிலிருந்து தொடர்ந்து கழுவப்படுகிறோம் என்பதை ஏற்கனவே கவனித்தோம். நாம் பிதாவோடு ஐக்கியத்தை பராமரித்தால், கிறிஸ்து வரும்போது நாம் நம்பிக்கையுடையவர்களாக இருக்கமுடியும் என யோவான் கூறுகிறார் (1 யோவான் 2:28). மேலும், "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவிகொடுக்கிறார் ..." என்கிற வாக்குத்தத்தத்தை அந்த நிருபத்தின் பின் பகுதியில் நாம் காண்கிறோம்

*(1 யோவான் 5:14). ஒரு அன்பின் பிதாவாக, தேவன் தம் பிள்ளைகளின் வேண்டுகோள்களை கேட்கிறார்.*

கூடுதலாக, தேவனோடு ஐக்கியமாயிருப்பதினால் கிடைக்கும் இன்னொரு ஆசீர்வாதத்தையும் நாம் கண்டுபிடிக்கிறோம்.வசனம் 7ஐ கவனியுங்கள்: "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்." நாம் ஒளியில் நடப்பதால் தேவனோடு ஐக்கியமுடையவராக இருப்பது மட்டும் அல்ல,ஒளியில் நடப்பதால் நாம் பாவமன்னிப்பை பெறுகிறவர்களாக மட்டும் அல்ல, நாம் ஒளியில் நடக்கும் போது, "ஒருவரோடொருவர் ஐக்கியம் உடையவர்களாயும் இருக்கிறோம்," தேவனோடுள்ள ஐக்கியத்தை நாம் அனுபவிக்கும் போது, நாம் மற்ற கிறிஸ்தவர்களோடுள்ள ஐக்கியத்தையும் அனுபவிக்கிறோம். நாம் தேவனோடு நெருங்கிய ஐக்கியமாக இருப்பது என்பது, ஒரு தனிப்பட்ட, தனித்திருக்கிற ஒரு காரியம் அல்ல என்ற உண்மையை இது வெளிப்படுத்துகிறது.

நாம் ஒருவரோடு நெருங்கிய உறவில் இருக்கும்போது, மற்றவர்களையும் அந்த உறவு முறையில் வரும்படி வரவேற்கிற ஒரு ஐக்கியத்தின் காட்சியை நாம் எப்படி காணமுடியும்? தந்தையும் தாயும் ஒவ்வொரு பிள்ளையையும் நேசிக்கிற,அதே சமயத்தில் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் நேசிக்கிற ஒரு பெரிய குடும்பத்தைப் பற்றி நாம் சிந்திக்கலாம். அப்படிப்பட்ட ஒரு குடும்பத்தில் ஒவ்வொரு குழந்தையும் தான் அன்புகூரப்படுவதை உணருகிறது மற்றும் தன் பெற்றோரோடும் மற்றும் தன் உடன் பிறந்தவர்களோடும் நெருக்கமாயிருக்கிறது. சகோதரர் மற்றும் சகோதரிகளோடு ஐக்கியமாயிருப்பது என்பது தந்தை மகன் என்ற நெருக்கமான, தனிப்பட்ட உறவில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை, மாறாக அதை மேப்படுத்துகிறது,

தேவனுடைய குடும்பமாகிய சபையும் அவ்விதமே இருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் தேவனோடு நெருங்கிய மற்றும் தனிப்பட்ட உறவை உடையவர்களாயிருக்கிறார்கள்; ஆனால் அதே சமயத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் தேவனுடைய குடும்பத்திலுள்ள சகோதர மற்றும் சகோதரிகளோடு நெருக்கமாயிருப்பதை உணருகிறார்கள். இந்த குடும்பத்தில் பொறாமை மற்றும் பாரபட்சம் என்ற காரியங்களுக்கு இடமில்லை. எல்லா பிள்ளைகளும், அவர்கள் தேவனை நேசிப்பதால், மற்றும் அவரோடு இணைக்கப்பட்டிருப்பதால், ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள் மற்றும் மற்ற எல்லா அங்கத்தினர்களோடும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விலையேறப் பெற்ற ஐக்கியத்தை நாம் சபையில் உடையவர்களாயிருக்கிறோம். இது பிதாவோடு ஐக்கியமாயிருப்பதால் வரும் பலனாக இருக்கிறது.

## முடிவுரை

பிதாவோடு ஐக்கியமாயிருப்பதினால் பலன் இருக்கின்றனவா? ஆம், ஐக்கியமாயிருப்பது என்பதே மிகப்பெரிய பலனாக இருக்கிறது! கிறிஸ்தவர்கள் என்ற வகையில், பிதாவோடு ஐக்கியமாயிருத்தல் மற்றும் அவரோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருத்தல் என்பதே இப்போதும் எப்போதும் நமது நம்பிக்கையும் மகிமையுமாயிருக்கவேண்டும். நாம் ஒவ்வொரு நாளும்

*அவரோடு வாழ்ந்து மற்றும் அவரோடு நடப்போமாக.*

குறிப்புகள்

[1]*"ஐக்கியம்" என்ற வார்த்தையானது, "தோழமை, நட்புறவு மற்றும் பொதுவாக பகிர்ந்து கொள்ளுதல்" என்று பொருள்படும் "கொய்னோனியா" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 233). [2]Lowell Mason, "Nearer, My God, to Thee," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996). Other hymns with similar ideas include "Nearer, Still Nearer," "Be with Me, Lord," "Thou, My Everlasting Portion" ("Close to Thee"), and "My God and I." [3]*கிறிஸ்தவர்கள் தேவனை அறிந்திருப்பதைப் பற்றி 1 யோவான் நிருபத்தின் பிற வசனப் பகுதிகள் பேசுகின்றன: காண்க 2:13, 14; 4:7, 8; 5:20.* [4]*நாம் தேவனில் நிலைத்திருத்தல் அல்லது தேவன் நம்மில் நிலைத்திருத்தல் என்ற கருத்தானது 1 யோவான் 2:6, 27, 28; 3:6, 24; 4:12, 13, 15, 16. ஆகிய வசனப் பகுதிகளிலும் போதிக்கப்பட்டுள்ளது. நாம் தேவனில் நிலைத்திருத்தல் மற்றும் தேவன் நம்மில் நிலைத்திருத்தல் ஆகியவற்றிற்கும் மேலாக, ஒரு கிறிஸ்தவர் "ஒளியில் நிலைத்திருத்தல்" (2:10) மற்றும் "தேவனுடைய வசனம் நம்மில் நிலைத்திருத்தல்" (3:9) பற்றியும் யோவான் போதித்துள்ளார். வேறுவகையில் கூறுவதானால், ஒரு கிறிஸ்தவர் தன் சகோதரர்களில் அன்புகூராவிட்டால், அவன் மரணத்திலே நிலை கொண்டிருக்கிறான் (3:14). அவன் தன் சகோதரனை பகைத்தால், அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைநிற்காது (3:15); மேலும் அவன் தன் சகோதரனுக்கு உதவி செய்ய மறுத்தால், தேவ அன்பு அவனுக்குள் நிலை கொள்வதில்லை (3:17).* [5]*இந்த வார்த்தைகள் யோவான் சுவிசேஷ (1:1-14) அறிமுகத்திற்கு இணையாக உள்ளதால், இவைகள் 1 யோவான் நிருபத்திற்குறிய "அறிமுகம்" என அழைக்கப்படுகிறது.* [6]Stephen S. Smalley, *1, 2, 3 John,* Word Biblical Commentary (Waco, Tex.: Word Books, 1984), 6; F. F. Bruce, *The Epistles of John: Introduction, Exposition and Notes* (N.p.: Pickering & Inglis, 1970; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 35. [7]Guy N. Woods, *A Commentary on the New Testament Epistles of Peter, John, and Jude* (Nashville: Gospel Advocate Co., 1983), 210. [8]Thomas F. Johnson, *1, 2, and 3 John,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 25. (Emphasis removed.) [9]*காண்க 1 யோவான் 3:14, 15, 17; 4:8, 12, 13.* [10]*காண்க 1 யோவான் 3:24அ மற்றும் 2:17ஆ.*

[11]*காண்க 1 யோவான் 2:24.* [12]*ஒளியில் நடப்பது என்பது நம்முடைய சகோதர சகோதரிகளை நேசிப்பதை உள்ளடக்கியிருக்கிறது (1 யோவான் 2:9-11).* [13]*1 யோவான் 1:5-7, பாவம் செய்வதை தவிர்ப்பதற்காக தேவனுடைய பிள்ளைகள் நீதியாக வாழ வேண்டியது அவசியம், என்ற இந்த நிருபத்தின் இன்னொரு மையக் கருத்தை அறிமுகம் செய்கிறது. உதாரணமாக 1 யோவான் 2:1, 29; 3:6, 10 ஆகியவற்றை காணவும்.* [14]*1 யோவான் 4:8, 16இல் "தேவன் அன்பாகவே இருக்கிறார்," என்று வாசிக்கிற அதே வேளையில், 1:7 இல் "தேவன் ஒளியாயிருக்கிறார்" என்று வாசிக்கிறோம். அதாவது தேவனானவர் முற்றும் பரிசுத்தமானவராயும் நீதியானவராயும் இருக்கிறபடியால், அவர் "ஒளியாயிருக்கிறார்" அவரில் பாவம் எதுவும் இல்லை. தேவனானவர் நேசிக்கிறவராக இரக்கமுள்ளவராக, மனதுருக்கமுள்ளவராக மற்றும் தயையுள்ளவராக இருக்கிறபடியால், "தேவன் அன்பாகவே இருக்கிறார்."* [15]*சில விளக்கவுரையாளர்களின் கூற்றுப்படி,யோவான்*

*தான் எதிர்த்து போரிட்ட பிரிவினைவாதிகள்/கள்ளப் போதகர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளை முன்வைத்தார் (1) தேவனோடு ஐக்கியமாயிருக்கிற அதே வேளையில் பாவம் செய்ய முடியும் என்ற அவர்களின் கூற்று (வசனம் 6); (2) பாவத்தின் கொள்கையை மறுப்பது என்ற அவர்கள் கூற்று (வசனம் 8); மற்றும் (3) தாங்கள் பாவம் செய்யவில்லை என்ற அவர்கள் கூற்று (வசனம் 10). யோவான் இந்த மூன்று தவறான கூற்றுக்களையும் மறுத்து பேசினார்.* (John R. W. Stott, *The Epistles of John,* The Tyndale New Testament COSommentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960], 72-79.) [16]*கிறிஸ்தவர்களும் தங்கள் பாவத்திலிருந்து மனம்திரும்ப வேண்டும் (நடபடிகள் 8:22).* [17]*"நடந்தால்," "ஐக்கியப்பட்டிருப்போம்," மற்றும் "சுத்திகரிக்கும்" என்ற வினைச் சொற்கள், தொடர்ந்து செய்யப்படும் செயலை குறிக்கிற நிகழ்காலத்தில் உள்ளன: "நாம் ஒளியிலே நடந்தால் ... ஐக்கியப்பட்டிருக்கிறோம் ... மற்றும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை சுத்திகரித்துக்கொண்டிருக்கிறது."*